1993 மார்ச் 23]

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனத்தூர் கிராமத்தில் சுற்றியுள்ள தனியார்கள் ஆதிதிராவிடர்களுக்கு நிலம் கொடுக்க மறுத்த காரணத்தால் அதிகாரிகள் அங்கேயுள்ள கோவில் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசுக்கு முன்மொழிவு அளித்து இருக்கிறார்கள். அதை பரிசீலித்து உடனடியாக ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் தடையில்லாச் சான்று கிடைக்கப்பெற்ற பின்னர் இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் துரிதமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 159, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

159—

ராதாபுரம் தொகுதி உவரி மீனவர்களுக்கு வீடு கட்டுதல்.

*13809—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி உவரி மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் கூறி விட்டார்கள். உவரியில் ஏராளமான மீனவர்கள் நீண்ட நெடுநாட்களாக நான்கு புறமும் தென்னை ஓலை, கூறை பக்கமும் தென்னை ஓலை என்ற நிலையில் வீடுகளை அமைத்து கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அரசின் திட்டத்தின் மூலமாக இன்று வரையில் வீடுகள்

கட்டித்தரப்படாத நிலை இருக்கிறது. காரணம் கேட்டால் அவர்களுக்குத் தனியாக நிலம் இல்லையென்று சொல்கிறார்கள். அவர்கள் இப்போது குடியிருக்கிற ஓலையால் நான்கு புறமும் சுவர் கட்டியிருக்கிற அந்த இடங்களில் அவர்களுக்கு அந்த இல்லங்களை அரசு கட்டித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியைப் பொறுத்த மட்டிலும், அங்கு வாழுகின்ற மீனவர்களுக்கு கிட்டத்தட்ட அரசின் மூலம் 175 வீடுகள் இதுவரை கட்டித் தரப்பட்டு இருக்கிறன. தேவையான 3 சென்ட் நிலத்தை இலவசமாக மீன்துறை வசம் ஒப்படைக்கும் பட்சத்திலே இந்தக் கோரிக்கை குறித்து வருகின்ற நிதி ஆண்டிலே நமது தாய் உள்ளமும் மனித நேயமும் கொண்ட தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த வகையிலே 1993–94 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், நிலம் அளிக்கும் பட்சத்தில் மட்டுமே இதனைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள விஜயாபதி, தோமையாபுரத்தில் இப்படிப்பட்ட ஓலை வீடுகள் எல்லாம் தீப்பிடித்த காரணத்தாலே, ஏறத்தாழ 26 வீடுகளை உடனே கட்டவேண்டிய ஒரு சூழ்நிலை கடந்த ஆண்டிலே ஏற்பட்டது. அப்படி இங்கேயும் தீப்பிடித்து அவர்கள் தங்களுடைய உடைமைகளை எல்லாம் இழந்து தவிக்கின்ற நிலை வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் குடியிருக்கின்ற நிலங்களுக்கு பட்டா வழங்கச் செய்து, அங்கேயே நீங்கள் அனுமதி வழங்கி, அந்தத் தொகையை அனுமதித்து, இல்லங்களைக் கட்டித்தர துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 160. திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.